# நாணயம் செய்திமடல்

(உள் சுற்றுக்கு மட்டும்)

மலர் :1 இதழ் :6

### தனித்து வாழும் பெண்கள் சமூக உள்ளடக்கத்திட்டம்
### சிறப்பு வெளியீடு

ஆசிரியர்: திருமிகு.பொற்கொடி, ஆசிரியர் குழு உறுப்பினர்கள் : திருமிகு.எர்ஸ்கின், திருமிகு.சந்தனாமாரி, திருமிகு.ராஜேஸ்வரி, திருமிகு.நிர்மல்

அன்பான வாசகர்களே!
ஆசிரியர் குழுவின் அன்பான வாழ்த்துக்கள்!

கொஞ்ச இடைவெளிக்கு பிறகு நம் நாணயம் செய்திமடலின் மூலம் உங்களை தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். தவிர்க்க முடியாத பல காரணங்களால், திட்டமிட்டப்படி குறித்த இடைவெளியில் நாணயம் செய்திமடல் வெளியிட முடியவில்லை சிரமத்திற்கு மன்னிக்கவும். இதற்கிடையே வாசகர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற விமர்சன கடிதங்கள், நம் கௌரவ ஆலோசகர் முனைவர்.கண்ணன் அவர்களின் தூண்டுதல், ஆசிரியர் குழுவின் தன்முனைப்பு மீண்டும் இச்செய்திமடலை தொடர்ந்து வெளியிட ஆதாராமாய் அமைந்தது. இம்மடலின் செய்தியை செழுமையாக்க தங்களின் அனுபவங்களை கட்டுரைகளாக எங்களோடு பகிர்ந்து கொள்ள வரவேற்கிறோம். இம்மடலின் முத்தாய்ப்பாக தனித்து வாழும் பெண்களின் குடும்ப, சமூக புறந்தள்ளுதலினால் அவர்கள் படுகின்ற வேதனைகளை வெளிக்கொணர முயற்ச்சிக்கிறோம். குடும்ப, கலாச்சார, பொருளாதார, பாலியல் ரீதியான பிரச்சனைகளினால் தனித்து வாழும் பெண்கள் சின்னாபின்னமாகின்றனர். என்று நான் சொல்லி நீங்கள் தெரிய வேண்டியதில்லை. ஆனாலும் அப்பெண்களுக்கும் உணர்வுகள் உண்டு, உரிமைகள் உண்டு, உறவுகள் உண்டு என்று உணர்த்துவது நமது கடமை அல்லவா!

ஓ! பெண்ணினமே! தனிமை வெறுமையன்று, தனிமை தான் சாதனை படைக்கும். அதனால் தான் தனித்து வாழும் பெண்களை சிறப்புப் பெண்களென்று அழைக்கின்றோம். நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம், அவர்களின் குடும்பத்திலும், சமுதாயத்திலும் புறந்தள்ளாமல் அங்கீகரித்து ஏற்றுக் கொண்டாலே போதும் அது தான் சமூக உள்ளடக்கமாகும்.

சிறப்புப் பெண்களே!

தனி மரமா நிக்கிறேன்னு தவிப்பும் வேண்டாம்
தாயாக வந்திருந்து தோள் கொடுப்பேன் தங்களுக்கு
தன்னம்பிக்கை வளர்த்து நீயும் தரணியின் மீதினிலே
தாண்டவம் செய்திடுவாய் தனக்கு நிகர் நீயென்றே என்ற

நம்பிக்கையின் வரிகளை தனதாக்கிக் கொள்ளுங்கள் தனித்து வாழும் பெண்ணே! நீ சாதாரண பெண்ணல்ல "சிறப்புப் பெண்" உன் வாழ்வின் அர்த்தத்தை உணர்ந்து கொள் உலகிற்கும் உணர்த்து.

நட்புறவுடன்,
த.பொற்கொடி, ஆசிரியர்.

## அவளை வாழ விடுங்கள் :

"மாண்டவன் மாண்ட பின்னர் அவனின்
மனைவியின் உள்ளத்தை
ஆண்டையர் காண்பதில்லை ஐயகோ
அடிமை பெண்கதியே"

என்ற புரட்சிக்கவி பாரதியின் தனித்து வாழும் பெண்களின் நிலைக்குறித்த புலம்பலை பார்க்கும் பொழுது உள்ளம் குமுறுகிறது.

சமூக சீர்திருத்தவாதி ராஜாராம் மோகன்ராய் பெண்கள் உடன்கட்டை ஏறும் பழக்கத்திற்கு எதிராக குரல் கொடுத்து கலாச்சாரத்தை தவிடு பொடியாக்கி பெண் விடுதலையின் கதாநாயகராய் வாழ்ந்த தாய் திருநாட்டில் தனித்து வாழும் பெண்களுக்கு

எதிராக நடக்கும் கொடுமைகளை நினைக்கும் பொழுது கண்கள் குளமாகின்றது. பேதமையை முறியடித்து பெண் உரிமைக்காய், பெண் விடுதலைக்காய் அரும்பாடுபட்ட பெரியார் போன்ற சமூக சிந்தனையாளர்கள் வாழ்ந்த நம்நாட்டில் இன்னும் கலாச்சார மூட நம்பிக்கைகளால் ஆணாதிக்க சிந்தனையால் பெண்களை அடிமைப்படுத்தி அதிலும் குறிப்பாக தனித்து வாழும் பெண்களை (சிறப்புப் பெண்கள்) கேவலமாய், கொச்சையாய் சித்தரித்து கொடுமைப்படுத்துகின்ற மாந்தரை நினைக்கும் போது நெஞ்சு பொறுக்குதில்லையே!

இது அறிவின் வரிகளல்ல இந்நிலையை முற்றிலும் வெளிப்படுத்த முடியவில்லையே என்ற ஆற்றாமையின் வெளிப்பாடுகள். ஆசிரியர் அவருடைய கடிதத்தில் கூறியுள்ளது போல தனித்து வாழும் பெண்களுக்கும் உணர்வுகள் உண்டு, உரிமைகள் உண்டு இதை நிலைப்படுத்தி அவர்களிடையே தன்னம்பிக்கையை ஏற்படுத்த இதை வாசிக்கின்ற ஒவ்வொரு வாசகர்களும் உறவுகளாய் மாற வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் தனித்து வாழும் பெண்கள் ( சிறப்புப் பெண்கள் ) அவர்கள் சார்ந்துள்ள குடும்பங்களிலும், சமுதாயத்திலும் சந்திக்கின்ற பிரச்சனைகள் கொஞ்ச நஞ்சமல்ல. கணவனை இழக்கும் முன்பாக அந்தப் பெண் குடும்ப முன்னேற்றத்திற்காக ஆற்றுகின்ற பணிகள், கணவனை இழந்த பின்பும் தொடர்ந்து கொண்டே தான் இருக்கின்றன. ஆனால் கணவனை இழந்த பிறகு அங்கீகாரம் மட்டும் கிடைக்கவில்லை, மாறாக புறந்தள்ளுதல் அதிகரிக்கின்றது. '*ஒட்டி* உறவாடிய உறவுகள் கூட எட்டி நின்று எள்ளி நகைக்கின்றது'. குடும்ப விஷேசங்களிலும், சமுதாய விழாக்களிலும் ஓரங்கப்பட்டு உணர்விருந்தும் வெளிக்காட்டமுடியாத உணர்வற்ற நடைபிணங்களாய் மாற்றப்படுகின்றனர். இந்த சிறப்புப் பெண்கள் தனித்து வாழ்கின்ற ஒரே காரணத்தினால் உடலை ஆள ( பாலியல் தொந்தரவு ) உறவுக்காரர்களும் அந்நியரும் துடிக்கின்றனர். ஆனால் கணவனின் ஆஸ்தியை மட்டும் அவர்களுக்கு கொடுக்க மறுக்கின்றனர். உளவியல் ரீதியான உணர்வுகளை வெளிப்படுத்தவோ! அல்லது அவளுக்கு தேவையான அடிப்படை காரியங்களை நிவர்த்தி செய்ய யாராவது ஒரு வயது முதிர்ந்தோரை உதவிக்கு அழைத்தால் கூட கேவலமாய், கொச்சையாய் வர்ணிக்கின்றது இந்த பாழ்பட்ட சமூகம். உடல் சுகவீனத்திற்காக ஒரு தனித்து வாழும் பெண் மருத்துவமனைக்கு சென்றால் கூட கீழ்த்தரமாகப் பேசி அப்பெண்களை மனதளவில் ஒடிய செய்து விடுகிறார்கள். எந்தவொரு காரியத்திற்கு செல்லும் போதும் ஒரு சிறப்புப் பெண் எதிராக வந்துவிட்டால் அது எவ்வளவு பெரிய காரியமாக இருந்தாலும் அதை மாற்றி வைக்க தயங்குவதில்லை மற்றும் கேவலமான வார்த்தைகளால் அவர்களை திட்டிவிட்டு செல்கின்றனர். ஐந்தறிவு படைத்த பூனைக்கு ஒப்பாக ஆறறிவு படைத்த இந்த படைப்பாளியை ஒப்பிடுகின்றனர்.

பொதுவாக ஆண் மகன் எந்த வயதில் தன் மனைவியை இழந்தாலும் அடுத்த வருடத்திலோ! ஏன்? அடுத்த மாதத்திலோ மறுமணம் செய்து விடுகின்றனர். இது அவன் தனித்து வாழ முடியாமல் சவால்களை எதிர் கொள்ள முடியாத கோழைத்தனத்தை வெளிக்காட்டுகின்றது. ஆனால் ஒரு பெண் இள வயதில் தன்னுடைய கணவனை இழந்தாலும் கூட குடும்பம், கலாச்சாரம், பொருளாதாரம் விதிக்கின்ற அனைத்துப் பிரச்சனைகளையும் கடந்து தன் எல்லா உணர்வுகளையும் உள்ளடக்கி, தன்மானத்தை தக்க வைத்துக் கொண்டு தன் குழந்தைகளையும் சரியான விதத்தில் வளர்த்தெடுத்து குடும்ப, கௌரவம் சிறிதளவிலும் பாதிக்கப்படாதபடி கவனமாய் பாதுகாத்து குடும்பத்தை முன்னேற்றுகின்றாள். இது அவளது தியாகத்தை மட்டும் உணர்த்தவில்லை, அவளது தைரியத்தையும் உணர்த்துகின்றது. இந்த தியாகச்சுடரை பூஜிப்பதை விட்டுவிட்டு பழிக்கின்றதே இப்பாழுலகம்.

அன்பு தோழியரே! தோழர்களே! நீங்கள் தனித்து வாழும் பெண்களுக்கு
"உதவி செய்யாவிட்டாலும் உபத்திரம் செய்யாதிருங்கள்
கருணை கொள்ளாவிட்டாலும் கடுஞ்சொல் சொல்லாதிருங்கள்
இரக்கம் காட்டாவிட்டாலும் இகழ்ந்து பேசாதிருங்கள்
அவளை அவளாக இருக்க விடுங்கள்"
அவளை வாழ விடுங்கள்! அவளை வாழ விடுங்கள்!

சிறப்புப் பெண்கள் சமூக உள்ளடக்கத்தில்,
அ.எர்ஸ்கின், ஆசிரியர் குழு.

வெற்றிபடிகளில் பிச்சையம்மாள் :

என்னுடைய பெயர் பிச்சையம்மாள் எனக்கு இரண்டு ஆண் மற்றும் நான்கு பெண் குழந்தைகள் உள்ளனர். எனக்கு 12 வயதில், 40 வயதான என் மாமாவுக்கு என் பெற்றோர்

திருமணம் செய்து வைத்தனர். 15 வயதிலேயே நான் முதல் குழந்தைக்கு தாயாகி, அடுத்தடுத்து 8 குழந்தைகளை பெற்றெடுத்தேன். என் கணவர் ஆஸ்துமா நோயினால் கடந்த ஆண்டு இறந்து விட்டார். நான் எனது அருமை குழந்தைகளை மிகவும் சிரமப்பட்டு கூலி வேலை செய்து வளர்க்கின்றேன். இரண்டு ஆண் மகன்களுக்கு திருமணமும் செய்து வைத்தேன். அவர்கள் தனிக்குடித்தனம் சென்றுவிட்டனர். மூன்று பெண்களுக்கும் மூன்று பவுன் நகைபோட்டு திருமணம் செய்து வைத்தே தன். திடீரென்று என் மகள் வள்ளி என்பவளின் கணவர் விபத்தில் இறந்து விட்டார். அவளும் மூன்று குழந்தைகளை வைத்துக் கொண்டு என்போல் கணவரை இழந்து மிகவும் கஷ்டப்படுகிறாள். அவளது குடும்பத்தையும் சுமக்க வேண்டிய பொறுப்பு எனக்கு வந்தது. ஒரு குடும்பத்திலே அம்மாவும், மகளும் சிறப்புப் பெண்ணாக உள்ளதை சுட்டிக்காட்டி உறவினர்கள் எங்களை மிகவும் வேதனைப்படுத்துகின்றனர். அதை நினைத்து நான் அவமானத்தை தாங்கிக் கொள்ளும் கட்டாயத்தில் இருந்தேன். என் பெண் குழந்தைகளை திருமணம் செய்து கொள்ள முன் வருபவர்களை ராசியில்லாத குடும்பம் என்று சொல்லி திருமணத்தை நிறுத்தி விடுகின்றனர். என் உறவினர்களால் நானும் என் மகளும் சமுதாயத்தில் நடமாட அருகதையில்லாதவர்களாக சுட்டிக் காட்டப்பட்டோம். நான் உள்ளக்குமுறலை சொல்லவழியின்று தவித்து கொண்டிருக்கும் வேளையில் "ஸ்பீச் சிறப்புப் பெண்கள்" ஆற்றுப்படுத்துதல் பயிற்சியில் கலந்து கொள்ளகிட்டிய வாய்ப்பு, எங்களுக்கு கிடைத்த பெரும்பாக்கியமாக நினைக்கின்றோம். பயிற்சியில் கலந்து கொண்டு, நாங்கள் தனியாக இல்லை, வாழ வழிவுண்டு என்பதையும் உணர்ந்தோம். மனதில் தன்னம்பிக்கை பிறந்தது. எங்களுடன் 637 பெண்கள் உள்ளனர் என்று நினைக்கையில் மனதில் உற்சாகம் பிறந்தது. தைரியத்துடன் பிரச்சனைகளை எதிர்கொள்ள முன்வந்தேன். ஸ்பீச் மூலம் கடன் பெற்று ஆடுவளர்ப்பு செய்து வருகிறேன். ஸ்பீச் ஆர்வக்குழுவில் (நிம்மதி கூட்டமைப்பு) உறுப்பினராக உள்ளேன். எனது கடைசி பெண் குழந்தையை 9 ஆம் வகுப்பு படிக்க வைத்துக் கொண்டிருக்கிறேன். நான் தற்சமயம் 7 பவுன் நகை வாங்கியுள்ளேன், சந்தோஷமாகவும், நிம்மதியாகவும் இருக்கிறேன். என் போன்ற சிறப்புப் பெண்களுக்கு நான் எடுத்துக்காட்டாக உள்ளேன். ஸ்பீச் ஆர்வக்குழு மற்றும் ஆலோசனை மையத்திற்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

நன்றி!

நேரடி பேட்டி கண்டவர்,<br>
ப. சந்தனமாரி.

நாணயத்தின் பலமுகங்கள் :

நாணயப் பெண்கள் சுய உதவி குழுக்களின் மூலமாக தொடர்ந்து பல திட்டங்களிலும் பயனடைந்து வருவதை சொல்லாமல் இருக்க முடியாது. பெண்கள் என்றாலே அடக்கம், பொறுமை, சாந்தம், போன்ற குணங்களால் நிறைந்தவர்கள். ஆனாலும் அடுத்தவர்களுக்காக தங்களை தாழ்த்தி தங்களுக்குள்ள திறமைகளை வெளிக்கொணராத தங்களை, தாங்களே அடக்கி வருத்தக்கூடியவர்கள் என்பது கவலைக்குறியதாகும். எத்தனைக் காலங்களுக்குத் தான் பெண்களின் இந்த அடிமை வாழ்வு? பெண்களின் மறுமலர்ச்சிக்கு இடம் இல்லாத நிலையை மாற்றி போடுவதற்கான, மாற்றத்திற்குரிய கருவியாக வந்தது "ஸ்பீச்". இதன் மூலம் பெண்கள் குழுவாக இணைக்கப்பட்டு, அந்தக் குழுவிற்கு நாணயம் என்ற பெயரையும் வைத்தனர். இதன் மூலம் பெண்களே திட்டமிட்டு சேமிக்கும் பழக்கம், செலவு செய்யும் உரிமை, வரவு செலவு பார்க்கும் திறன், குடும்பத்தை சீராக நிர்வகிப்பது போன்றவைகளில் வளர்ச்சி பெற்று தங்களை நிலைநிறுத்தி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

விட்டின் சமையல் அறையிலே தங்களது காலத்தை கழித்த காலத்தை மாற்றி, அரசு மற்றும் வெளித்தொடர்புகளை வலுப்படுத்தி, பெண்களாலும் அனைத்தையும் செய்ய முடியும் என்பதை நிரூபித்து வருகிறார்கள். மேலும் குழுக்களின் மூலம் சேமிப்பு பழக்கம், செலவுகளை எளிதாக சந்தித்தல், பெண்களுக்குள் ஒற்றுமை நிலைநிறுத்துதல், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை ஏற்படுதல், பணம் வீணாகாது பாதுகாக்கபடுதல் போன்ற நன்மைகள் நிறைந்த நாணயம் குழுக்களை திறம்பட செயல்படுத்தி வருகின்றனர். முன்பு பெண்கள் ஆண்களின் அதிகாரத்தினால் அடிமைப்படுத்தப்படும், குடும்பத்தில் எந்த வகையிலும் முடிவு எடுக்க முடியால் மற்றவர்களையே சார்ந்திருக்கும் சூழல் இருந்தது. குடும்பத்தில் அவசரத் தேவைகளை சந்திக்க முடியாமல் இருந்த போது, இந்த கட்டுகளிலிருந்து விடுவிக்கும் வகையில் கூண்டுக்குள் அடைக்கப்பட்டிருக்கும் கிளியைப் போல் பெண்கள் இருந்த நிலை மாறி கூண்டிலிருந்து வெளியில் சுதந்திரமாக பறக்க, நாணய சுய உதவிக் குழுக்கள் தீவிர முனைப்பாய் செயல்படுகின்றன.

நாணயக்குழுக்கள் மூலம் பயனடைந்து வரும் பெண்களுக்கு அடுத்த வாய்ப்பாக வந்தது

பெண்கள் பாதுகாப்பு அட்டை திட்டம். பெண்கள் பாதுகாப்பு அட்டை மூலம், பெண்களுக்கு சந்தை தொடர்பு, திட்டமிட்டு செலவு செய்யும் திறன், செலவு செய்யும் உரிமை, அவசரத் தேவைகளை பூர்த்தி செய்தல் போன்ற நன்மைகளால் நிறைவு பெற்று வருகின்றனர். தங்கள் குடும்பத்திற்கு செலவிற்கேற்றார்போல் மதிப்புள்ள அட்டைகளை பெற்று பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு கூட்டமைப்பு திருச்சுழியில் இயங்கி வரும் நாணய பல்பொருள் அங்காடியில் பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்க பெற்று இன்புறுகின்றனர். நமது கடை என்ற உரிமையோடு சத்துள்ள ஆகாரம் கையில் காசு இல்லாமலும், பணம் திரும்ப செலுத்துவதற்கு ஏற்ற மதிப்பிற்குப் பொருட்கள் பெற்று தங்களது வாங்கும் திறனை அதிகரித்து வருகின்றனர்.

பண சேமிப்புக்காக மட்டுமே சுய உதவிக்குழுக்கள் என்ற எண்ணத்தை தகர்த்து சுயநலம் கடந்து, பொது நலம் காத்து பெண்ணுரிமை மலர நாணயக்குழுக்கள் பெரிதும் உதவுகின்றன.

தொகுப்பு
கிறிஸ்டி ஷீலா

## தம்பட்டம் :

1. எக்கா! ஒன்னு தெரியுமா ஒனக்கு! நம்ம ஸ்பிச் ஆபிஸ்ல, கைம்பெண்கள் பிள்ளைகளுக்கு ஒரு வருஷ இலவச தையல் பயிற்சி சொல்லி தராங்களாம்! நம்ம ஸ்பிச் பெரிய சார், பொற்கொடி அக்கா , திருச்சுழி யூனியன் சேர்மன் எல்லான்தா இத தெறந்து வச்சிருக்காங்க! எம்பிராய்டரி, பொம்மை செய்யறது, கூடை பின்னுறது எல்லா சொல்லி தரங்களாம்! தையல கத்து முடிச்சவுடன கவர்மென்ட் சர்டிபிகட்டு வாங்கி தர ஏற்பாடு பண்ணுறாங்களாம்! அதுமட்டுமல்ல இந்த பிள்ளைகளுக்கு தையல் முடிச்சவுடன ரெடிமேட் துணி தைப்பதற்கு ஏற்பாடு பண்ண போறாங்களாம்! மில்லுக்கு போய் நம்ம பிள்ளைக கண்டபடி கஷ்டபடறதற்கு கைத்தொழில கத்துக்கிட்டா கவலபடாம இருக்கலாம்! ஊர் பொறணியோட சேத்து இதயும் சொல்லு, நம்ம ஊரு பிள்ளைகளாச்சும் நல்லா இருக்கட்டும்.

2. கருப்பாயி ; அக்கா! இது தெரியுமா?

ராமாயி : சொன்னாதானடி தெரியும்.

கருப்பாயி : இப்ப பெண்கள் பிரச்சனைகள தீர்ப்பதற்கும் பெண்கள் கூட்டமைப்பு வச்சிருக்க மாதிரி, ,கைம்பெண் பிரச்சனய தீர்ப்பதற்கும், அவங்களுக்கு ஆலோசனை சொல்றதக்கும், மற்றும் வருமானத்த பெருக்குறதுக்கும், நம்ம ஸ்பிச் ஆபிஸ்ல ஒரு கூட்டமைபபு ஏற்படுத்த போறாங்களாம்!

ராமாயி : அப்படியா!

கருப்பாயி : ஆமாக்கா! அந்த கூட்டமைப்பு பேரு என்ன தெரியுமா?

ராமாயி : தெரியாது அதயும் நீயே! சொல்லு.

கருப்பாயி : நிம்மதியாம்!

ராமாயி : என்னக்கா பேர கேட்டா நிம்மதிங்கிற! முதல்ல பேர சொல்லுக்கா!

கருப்பாயி : அட கூறு கெட்டவள, பேரே நிம்மதி தான்.

ராமாயி : பேர கேட்கதற்கே நல்லா இருக்கு. எப்படியோ! அந்தப் பெண்கள் நிம்மதியா இருக்கணும் அது தான் நம்ம விருப்பம்.

கருப்பாயி : ஏதோ! முதல்ல இந்த கூட்டத்துக்கு போறப்ப என்ன இந்த கைம்பெண்கள கூப்பிட்டு, கூப்பிட்டு கூட்டம் நடத்துறாங்கன்னு யோசிச்சேன். ஆனா! இப்ப தான் தெரியுது, இதுல இவ்வளவு நல்ல விஷயம் இருக்குதுன்னு. பரவால நல்லதே நடக்கட்டும்.

ராமாயி : ஆமாக்கா! கட்டாயாமா நல்லது தான் நடக்கும்.

3. ராமாயி : அக்கா! நீ சொன்னைதையெல்லாம் நான் கேட்டல்ல, இப்ப நான் ஒரு நல்ல செய்தி சொல்ற கேளு.

கருப்பாயி : அப்படி! என்னடி முக்கியமான செய்தி!

ராமாயி : மழை பெய்ததுல இருந்து நம்ம விவசாய ஆபிஸ்ரங்க அங்கேயும், இங்கேயும் வண்டியில போயிட்டு வராங்க, அது ஏன்னு தெரியுமா?

கருப்பாயி : சொன்னாதானடி தெரியும்

ராமாயி : பல நல்ல, நல்ல திட்டங்க எல்லாம் மக்களுக்காக வச்சிருக்காங்களா!

கருப்பாயி : அப்படியா!.. அப்படி என்னென்ன திட்டங்க இருக்கு

ராமாயி : ஒவ்வொன்னா சொல்ற கேளு. 1. செம்மை நெல் சாகுபடி முறையின்னு ஒன்ன அறிமகப்படுத்தியிருக்காங்க! அதன் மூலமா அதிக மகசூல் பெற முடியுமாம். இந்த முறைய பயன்படுத்துனா, ஆட்கள் குறைவா, தண்ணீர் தேவை குறைவா, களைகள் குறைய வாய்ப்பு இருக்கா, இயந்திரம் மூலமா களை எடுக்கலாம, வேர்களே நோய் தாக்காதா, இப்படி பல நல்ல விஷயங்கள் இந்த முறையில இருக்கா. 2. பவர்ஸ்பிரே, கைஸ்பிரே போன்றவற்ற எல்லா பாதி விலைக்கு கொடுக்கறாங்களா! உதாரணமா, 5500/. ரூபா மதிப்புள்ளத 2750/. ரூபாக்கு கொடுக்கறாங்களாம். 3. 25 ஏக்கருல, ஒரே கிராமத்துல கடலை பயிரிட்டா, பயிரிடும் அந்த ஒரு நபருக்கோ அல்லது அந்த குழுவிற்கோ கடலை விதைகள் எல்லா இலவசமா கொடுக்கறாங்களாம். 4. இலை தழைகள் ஆகியவற்றை மட்டுமே கொண்டு தயாரிக்கப்பட்ட இயற்கை உரங்கள எல்லா மானிய விலையில கொடுக்கறாங்களாம், அது எப்படி தயாரிக்கறது என்பத பற்றி விளக்க எல்லா கொடுக்கறாங்களாம். 5. பழக்கன்று எல்லா பாதி விலைக்கு கொடுக்கறாங்களாம்! தற்பொழுது மா, சப்போட்டா, நெல்லி, கொய்யா போன்ற கன்றுகள கொடுத்துகிட்டு இருக்காங்களாம்! உதாரணாம, 30 ரூபா மதிப்புள்ள சப்போட்டா கன்ற 15 ரூபாக்கு கொடுக்கறாங்களாம்.

கருப்பாயி : எவ்வளோ நல்ல திட்டங்களா இருக்கு. நம்ம தான் இத எல்லா பயன்படுத்தாம இருந்திருக்கோம்.

ராமாயி : நம்ம 'ஸ்பிச்சும், வேளாண்மை துறயும்' இணைஞ்சு இது சம்பந்தப்பட்ட பயிற்சிகள மக்களுக்கு கொடுத்து வராங்களா! உதாரணமா கொட்டம், பண்ணைமூன்றடைப்பு போன்ற கிராமத்துல நடத்திட்டாங்களாம்.

கருப்பாயி : உண்மையாவா சொல்ற! அக்கா இது நம்ம கிராமத்துல நடக்க என்ன பன்னுறது.

ராமாயி : உடனே ஸ்பிச் ஆபிசுக்கு போ! அவங்க ஏற்பாடு பண்ணுவாங்க.

தம்பட்டம் அடிப்பவர்
எ.அபிமன்யு

பாவக்காய் பேசுகிறது :

என்னுடைய பெயர் பாவக்காய். என்னுடைய பெயரைச் சொன்னவுடனே அனைவரின் முகமும் கோணுகிறது. நான் கேரட், பீட்ரூட், தக்காளி, கத்தரிக்காய் போன்ற காய்கறிகளைப் போல அழகாக இருப்பதில்லை. நான் பச்சை நிறமாக இருந்தாலும் கரடு முரடாக மற்றும் கசப்புத் தன்மை உடையவனாக இருக்கிறேன். இதனால் சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரும் என்னை வெறுத்து ஒதுக்குகின்றனர். சமுதாயத்தில் ஜாதி, மதம், கல்வி, பொருளாதாரம் போன்றவற்றில் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதைப் போல காய்கறிகளிலும் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. காய்கறிகளிலே நான் தாழ்த்தப்பட்ட, ஒதுக்கப்பட்ட காய்கறி இனத்தைச் சார்ந்தவன். சிறு துரும்பும் பல்குத்த உதவும் என்ற பழமொழிக்கேற்ப என்னாலும் மக்களாகிய உங்களுக்கு பயனுண்டு மற்றும் பலனுண்டு என்பதை நினைவுபடுத்துவதற்காகவே நான் உங்களிடத்தில் வந்துள்ளேன். பூமியானது தன்னைத் தோண்டுபவர்களையும் தாங்கிக் கொண்டு அவர்கள் வாழ நன்மைகள் செய்கிறதோ அதைப்போல என்னைக் கொன்று,மென்று, தின்று உண்பவர்களுக்கும் நான் நன்மை புரிவேன். நான் மருத்துவக் குணங்கள் கொண்டவன். என்னுடைய மருத்துவக் குணங்களைச் சொல்கின்றேன். சற்றே கவனமாகக் கேளுங்கள்.

- தலைவலி ஏற்படும் போது, என்னை பச்சையாகச் சாப்பிட்டால் நான் தலைவலியினைக் குணப்படுத்துவேன்.

- உங்களுடைய குடலில் புண் ஏற்படும் போது, என்னைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி சிறிதளவு பொரிகடலையினைச் சேர்த்து சாப்பிட்டு வந்தால் நான் குடல் புண்ணினை ஆற்றி விடுவேன்.

- என்னுடன் சிறிதளவு தண்ணீர் ஊற்றி இடித்து இதன் மூலம் கிடைக்கப் பெறும் சாறினைக் குடித்து வந்தால் குடல்புண் குணமாகும்.

- என்னைச் சட்டியில் இட்டு, சிறிதளவு தண்ணீர் ஊற்றி நன்றாகக் கொதிக்க வைத்து அந்த சாறினைக் குடித்து வந்தால் சர்க்கரை நோய் சரியாகும்.

- என்னுடைய பூவினை நன்றாக உலர வைத்து தேங்காய் எண்ணையில் போட்டு ஊற வைத்துத் தலையில் தேய்த்தால் கண்ணுக்கு குளிர்ச்சி ஏற்படும். மேலும் தலையிலுள்ள பேன்,ஈறு, போன்றவை மறையும். அதேபோல் பூவினை நல்லெண்ணையில் போட்டு வதக்கி பச்சரிசியுடன் சேர்த்து ஊற வைத்து, சிறிதளவு தேங்காய்ப் பூவினைச் சேர்த்துச் சாப்பிட்டால், மாதவிலக்கு தள்ளிப் போகுதல் சரியாகும்.

- என்னுடைய வேரினை நன்றாக இடித்துக் கிடைக்கப்பெறும் சாறினைத் தலையில் தேய்த்து வந்தால், உடலிலுள்ள சூடு தணிந்து குளிர்ச்சி ஏற்படும்.

- என்னுடைய பழத்தோளினை எடுத்துப் பாலில் போட்டு நன்கு ஊற வைத்து சாப்பிட்டால் வயதுக்கு வந்த பெண்களுக்கு ஏற்படுகின்ற அடி வயிற்று வலி குணமாகும்.

நான் ஒரு மருத்துவர் எனவே

*என்னைப் பயன்படுத்துங்கள்! வாழ்வில் பயன்பெறுங்கள்!*

தொகுப்பு
மு.முத்துமாணிக்கம்

குறிப்பு : இது போன்ற மூலிகை மருத்துவ குறிப்புகளை ஆசிரியர் குழுவிற்கு தெரிவித்து மக்கள் பயன்பெற உதவுங்கள். நன்றி

<u>ஆக்கம், ஆதரவு மற்றும் கௌரவ ஆலோசகர் :</u>

முனைவர்.பேராசிரியர்.**இரா.கண்ணன்**
இயக்குநர், கல்விப்பணியாளர் மேம்பாட்டுக்கல்லூரி,
காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

# நாணயம் செய்திமடல்

(உள் சுற்றுக்கு மட்டும்)

மலர் :1 இதழ் :6

### தனித்து வாழும் பெண்கள் சமூக உள்ளடக்கத்திட்டம் சிறப்பு வெளியீடு

ஆசிரியர்: திருமிகு.பொற்கொடி, ஆசிரியர் குழு உறுப்பினர்கள் : திருமிகு.எர்ஸ்கின், திருமிகு.சந்தனாமாரி, திருமிகு.ராஜேஸ்வரி, திருமிகு.நிர்மல்

அன்பான வாசகர்களே!
ஆசிரியர் குழுவின் அன்பான வாழ்த்துக்கள்!

கொஞ்ச இடைவெளிக்கு பிறகு நம் நாணயம் செய்திமடலின் மூலம் உங்களை தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். தவிர்க்க முடியாத பல காரணங்களால், திட்டமிட்டப்படி குறித்த இடைவெளியில் நாணயம் செய்திமடல் வெளியிட முடியவில்லை சிரமத்திற்கு மன்னிக்கவும். இதற்கிடையே வாசகர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற விமர்சன கடிதங்கள், நம் கௌரவ ஆலோசகர் முனைவர்.கண்ணன் அவர்களின் தூண்டுதல், ஆசிரியர் குழுவின் தன்முனைப்பு மீண்டும் இச்செய்திமடலை தொடர்ந்து வெளியிட ஆதாராமாய் அமைந்தது. இம்மடலின் செய்தியை செழுமையாக்க தங்களின் அனுபவங்களை கட்டுரைகளாக எங்களோடு பகிர்ந்து கொள்ள வரவேற்கிறோம். இம்மடலின் முத்தாய்ப்பாக தனித்து வாழும் பெண்களின் குடும்ப, சமூக புறந்தள்ளுதலினால் அவர்கள் படுகின்ற வேதனைகளை வெளிக்கொணர முயற்ச்சிக்கிறோம். குடும்ப, கலாச்சார, பொருளாதார, பாலியல் ரீதியான பிரச்சனைகளினால் தனித்து வாழும் பெண்கள் சின்னாபின்னமாகின்றனர். என்று நான் சொல்லி நீங்கள் தெரிய வேண்டியதில்லை. ஆனாலும் அப்பெண்களுக்கும் உணர்வுகள் உண்டு, உரிமைகள் உண்டு, உறவுகள் உண்டு என்று உணர்த்துவது நமது கடமை அல்லவா!

ஓ! பெண்ணினமே! தனிமை வெறுமையன்று, தனிமை தான் சாதனை படைக்கும். அதனால் தான் தனித்து வாழும் பெண்களை சிறப்புப் பெண்களென்று அழைக்கின்றோம். நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம், அவர்களின் குடும்பத்திலும், சமுதாயத்திலும் புறந்தள்ளாமல் அங்கிகரித்து ஏற்றுக் கொண்டாலே போதும் அது தான் சமூக உள்ளடக்கமாகும்.

சிறப்புப் பெண்களே!
தனி மரமா நிக்கிறேன்னு தவிப்பும் வேண்டாம்
தாயாக வந்திருந்து தோள் கொடுப்பேன் தங்களுக்கு
தன்னம்பிக்கை வளர்த்து நியும் தரணியின் மிதினிலே
தாண்டவம் செய்திடுவாய் தனக்கு நிகர் நியென்றே
என்ற
நம்பிக்கையின் வரிகளை தனதாக்கிக் கொள்ளுங்கள்
தனித்து வாழும் பெண்ணே! நி சாதாரண
பெண்ணல்ல "சிறப்புப் பெண்" உன் வாழ்வின்
அர்த்தத்தை உணர்ந்து கொள் உலகிற்கும்
உணர்த்து.

நட்புறவுடன்,
த.பொற்கொடி, ஆசிரியர்.

## அவளை வாழ விடுங்கள் :

"மாண்டவன் மாண்ட பின்னர் அவனின்
மனைவியின் உள்ளத்தை
ஆண்டையர் காண்பதில்லை ஐயகோ
அடிமை பெண்கதியே"

என்ற புரட்சிக்கவி பாரதியின் தனித்து வாழும் பெண்களின் நிலைக்குறித்த புலம்பலை பார்க்கும் பொழுது உள்ளம் குமுறுகிறது.

சமூக சீர்திருத்தவாதி ராஜாராம் மோகன்ராய் பெண்கள் உடன்கட்டை ஏறும் பழக்கத்திற்கு எதிராக குரல் கொடுத்து கலாச்சாரத்தை தவிடு பொடியாக்கி பெண் விடுதலையின் கதாநாயகராய் வாழ்ந்த தாய் திருநாட்டில் தனித்து வாழும் பெண்களுக்கு எதிராக நடக்கும் கொடுமைகளை நினைக்கும் பொழுது கண்கள் குளமாகின்றது. பேதமையை முறியடித்து பெண் உரிமைக்காய், பெண்விடுதலைக்காய் அரும்பாடுபட்ட பெரியார் போன்ற சமூக சிந்தனையாளர்கள் வாழ்ந்த நம்நாட்டில் இன்னும் கலாச்சார மூட நம்பிக்கைகளால் ஆணாதிக்க சிந்தனையால் பெண்களை அடிமைப்படுத்தி அதிலும் குறிப்பாக தனித்து வாழும் பெண்களை (சிறப்புப் பெண்கள்) கேவலமாய், கொச்சையாய் சித்தரித்து கொடுமைப்படுத்துகின்ற மாந்தரை நினைக்கும் போது நெஞ்சு பொறுக்குதில்லையே!

இது அறிவின் வரிகளல்ல இந்நிலையை முற்றிலும் வெளிப்படுத்த முடியவில்லையே என்ற ஆற்றாமையின் வெளிப்பாடுகள். ஆசிரியர் அவருடைய கடிதத்தில் கூறியுள்ளது போல தனித்து வாழும் பெண்களுக்கும் உணர்வுகள் உண்டு, உரிமைகள் உண்டு இதை நிலைப்படுத்தி அவர்களிடையே தன்னம்பிக்கையை ஏற்படுத்த இதை வாசிக்கின்ற ஒவ்வொரு வாசகர்களும் உறவுகளாய் மாற வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஏனென்றால் தனித்து வாழும் பெண்கள் ( சிறப்புப் பெண்கள் ) அவர்கள் சார்ந்துள்ள குடும்பங்களிலும், சமுதாயத்திலும் சந்திக்கின்ற பிரச்சனைகள் கொஞ்ச நஞ்சமல்ல. கணவனை இழக்கும் முன்பாக அந்தப் பெண் குடும்ப முன்னேற்றத்திற்காக ஆற்றுகின்ற பணிகள், கணவனை இழந்த பின்பும் தொடர்ந்து கொண்டே தான் இருக்கின்றன. ஆனால் கணவனை இழந்த பிறகு அங்க்காரம் மட்டும் கிடைக்கவில்லை, மாறாக புறந்தள்ளுதல் அதிகரிக்கின்றது. '*ஒட்டி உறவாடிய உறவுகள் கூட எட்டி நின்று எள்ளி நகைக்கின்றது*'. குடும்ப விஷேசங்களிலும், சமுதாய விழாக்களிலும் ஓரங்கப்பட்டு உணர்விருந்தும் வெளிக்காட்டமுடியாத உணர்வற்ற நடைபிணங்களாய் மாற்றப்படுகின்றனர். இந்த சிறப்புப் பெண்கள் தனித்து வாழ்கின்ற ஒரே காரணத்தினால் உடலை ஆள ( பாலியல் தொந்தரவு ) உறவுக்காரர்களும் அந்நியரும் துடிக்கின்றனர். ஆனால் கணவனின் ஆஸ்தியை மட்டும் அவர்களுக்கு கொடுக்க மறுக்கின்றனர். உளவியல் ரீதியான உணர்வுகளை வெளிப்படுத்தவோ! அல்லது அவளுக்கு தேவையான அடிப்படை காரியங்களை நிவர்த்தி செய்ய யாராவது ஒரு வயது முதிர்ந்தோரை உதவிக்கு அழைத்தால் கூட கேவலமாய், கொச்சையாய் வர்ணிக்கின்றது இந்த பாழ்பட்ட சமூகம். உடல் சுகவீனத்திற்காக ஒரு தனித்து வாழும் பெண் மருத்துவமனைக்கு சென்றால் கூட கீழ்த்தரமாகப் பேசி அப்பெண்களை மனதளவில் ஒடிய செய்து விடுகிறார்கள். எந்தவொரு காரியத்திற்கு செல்லும் போதும் ஒரு சிறப்புப் பெண் எதிராக வந்துவிட்டால் அது எவ்வளவு பெரிய காரியமாக இருந்தாலும் அதை மாற்றி வைக்க தயங்குவதில்லை மற்றும் கேவலமான வார்த்தைகளால் அவர்களை திட்டிவிட்டு செல்கின்றனர். ஐந்தறிவு படைத்த பூனைக்கு ஒப்பாக ஆறறிவு படைத்த இந்த படைப்பாளியை ஒப்பிடுகின்றனர்.

பொதுவாக ஆண் மகன் எந்த வயதில் தன் மனைவியை இழந்தாலும் அடுத்த வருடத்திலோ! ஏன்? அடுத்த மாதத்திலோ மறுமணம் செய்து விடுகின்றனர். இது அவன் தனித்து வாழ முடியாமல் சவால்களை எதிர் கொள்ள முடியாத கோழைத்தனத்தை வெளிக்காட்டுகின்றது. ஆனால் ஒரு பெண் இள வயதில் தன்னுடைய கணவனை இழந்தாலும் கூட குடும்பம், கலாச்சாரம், பொருளாதாரம் விதிக்கின்ற அனைத்துப் பிரச்சனைகளையும் கடந்து தன் எல்லா உணர்வுகளையும் உள்ளடக்கி, தன்மானத்தை தக்க வைத்துக் கொண்டு தன் குழந்தைகளையும் சரியான விதத்தில் வளர்த்தெடுத்து குடும்ப, கௌரவம் சிறிதளவிலும் பாதிக்கப்படாதபடி கவனமாய் பாதுகாத்து குடும்பத்தை முன்னேற்றுகின்றாள். இது அவளது தியாகத்தை மட்டும் உணர்த்தவில்லை, அவளது தைரியத்தையும் உணர்த்துகின்றது. இந்த தியாகச்சுடரை பூஜிப்பதை விட்டுவிட்டு பழிக்கின்றதே இப்பாழுலகம்.

அன்பு தோழியரே! தோழர்களே! நிங்கள் தனித்து வாழும் பெண்களுக்கு

"உதவி செய்யாவிட்டாலும் உபத்திரம் செய்யாதிருங்கள்
கருணை கொள்ளாவிட்டாலும் கடுஞ்சொல்
சொல்லாதிருங்கள்
இரக்கம் காட்டாவிட்டாலும் இகழ்ந்து பேசாதிருங்கள்
அவளை அவளாக இருக்க விடுங்கள்"
அவளை வாழ விடுங்கள்! அவளை வாழ விடுங்கள்!

சிறப்புப் பெண்கள் சமூக உள்ளடக்கத்தில்,
அ.எர்ஸ்கின், ஆசிரியர் குழு.

வெற்றிபடிகளில் பிச்சையம்மாள் :

என்னுடைய பெயர் பிச்சையம்மாள் எனக்கு இரண்டு ஆண் மற்றும் நான்கு பெண் குழந்தைகள் உள்ளனர். எனக்கு 12 வயதில், 40 வயதான என் மாமாவுக்கு என் பெற்றோர் திருமணம் செய்து வைத்தனர். 15 வயதிலேயே நான் முதல் குழந்தைக்கு தாயாகி, அடுத்தடுத்து 8 குழந்தைகளை பெற்றெடுத்தேன். என் கணவர் ஆஸ்துமா நோயினால் கடந்த ஆண்டு இறந்து விட்டார். நான் எனது அருமை குழந்தைகளை மிகவும் சிரமப்பட்டு கூலி வேலை செய்து வளர்க்கின்றேன். இரண்டு ஆண் மகன்களுக்கு திருமணமும் செய்து வைத்தேன். அவர்கள் தனிக்குடித்தனம் சென்றுவிட்டனர். மூன்று பெண்களுக்கும் மூன்று பவுன் நகைபோட்டு திருமணம் செய்து வைத்தே தன். திடீரென்று என் மகள் வள்ளி என்பவளின் கணவர் விபத்தில் இறந்து விட்டார். அவளும் மூன்று குழந்தைகளை வைத்துக் கொண்டு என்போல் கணவரை இழந்து மிகவும் கஷ்டப்படுகிறாள். அவளது குடும்பத்தையும் சுமக்க வேண்டிய பொறுப்பு எனக்கு வந்தது. ஒரு குடும்பத்திலே அம்மாவும், மகளும் சிறப்புப் பெண்ணாக உள்ளதை சுட்டிக்காட்டி உறவினர்கள் எங்களை மிகவும் வேதனைப்படுத்துகின்றனர். அதை நினைத்து நான் அவமானத்தை தாங்கிக் கொள்ளும் கட்டாயத்தில் இருந்தேன். என் பெண் குழந்தைகளை திருமணம் செய்து கொள்ள முன் வருபவர்களை ராசியில்லாத குடும்பம் என்று சொல்லி திருமணத்தை நிறுத்தி விடுகின்றனர். என் உறவினர்களால் நானும் என் மகளும் சமுதாயத்தில் நடமாட அருகதையில்லாதவர்களாக சுட்டிக் காட்டப்பட்டோம். நான் உள்ளக்குமுறலை சொல்லவழியின்று தவித்து கொண்டிருக்கும் வேளையில் "ஸ்பிச் சிறப்புப் பெண்கள்" ஆற்றுப்படுத்துதல் பயிற்சியில் கலந்து கொள்ளகிட்டிய வாய்ப்பு, எங்களுக்கு கிடைத்த பெரும்பாக்கியமாக நினைக்கின்றோம். பயிற்சியில் கலந்து கொண்டு, நாங்கள் தனியாக இல்லை, வாழ வழிவுண்டு என்பதையும் உணர்ந்தோம். மனதில் தன்னம்பிக்கை பிறந்தது. எங்களுடன் 637 பெண்கள் உள்ளனர் என்று நினைக்கையில் மனதில் உற்சாகம் பிறந்தது. தைரியத்துடன் பிரச்சனைகளை எதிர்கொள்ள முன்வந்தேன். ஸ்பிச் மூலம் கடன் பெற்று ஆடுவளர்ப்பு செய்து வருகிறேன். ஸ்பிச் ஆர்வக்குழுவில் (நிம்மதி கூட்டமைப்பு) உறுப்பினராக உள்ளேன். எனது கடைசி பெண் குழந்தையை 9 ஆம் வகுப்பு படிக்க வைத்துக் கொண்டிருக்கிறேன். நான் தற்சமயம் 7 பவுன் நகை வாங்கியுள்ளேன், சந்தோஷமாகவும், நிம்மதியாகவும் இருக்கிறேன். என் போன்ற சிறப்புப் பெண்களுக்கு நான் எடுத்துக்காட்டாக உள்ளேன். ஸ்பிச் ஆர்வக்குழு மற்றும் ஆலோசனை மையத்திற்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். நன்றி!

நேரடி பேட்டி கண்டவர்,
ப. சந்தனமாரி.

நாணயத்தின் பலமுகங்கள் :

நாணயப் பெண்கள் சுய உதவி குழுக்களின் மூலமாக தொடர்ந்து பல திட்டங்களிலும் பயனடைந்து வருவதை சொல்லாமல் இருக்க முடியாது. பெண்கள் என்றாலே அடக்கம், பொறுமை, சாந்தம், போன்ற குணங்களால் நிறைந்தவர்கள். ஆனாலும் அடுத்தவர்களுக்காக தங்களை தாழ்த்தி தங்களுக்குள்ள திறமைகளை வெளிக்கொணராத தங்களை, தாங்களே அடக்கி வருத்தக்கூடியவர்கள் என்பது கவலைக்குறியதாகும். எத்தனைக் காலங்களுக்குத் தான் பெண்களின் இந்த அடிமை வாழ்வு? பெண்களின் மறுமலர்ச்சிக்கு இடம் இல்லாத நிலையை மாற்றி போடுவதற்கான, மாற்றத்திற்குரிய கருவியாக வந்தது "ஸ்பிச்". இதன் மூலம் பெண்கள் குழுவாக இணைக்கப்பட்டு, அந்தக் குழுவிற்கு நாணயம் என்ற பெயரையும் வைத்தனர். இதன் மூலம் பெண்களே திட்டமிட்டு சேமிக்கும் பழக்கம், செலவு செய்யும் உரிமை, வரவு செலவு பார்க்கும் திறன், குடும்பத்தை சிராக நிர்வகிப்பது போன்றவைகளில் வளர்ச்சி பெற்று தங்களை நிலைநிறுத்தி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

விட்டின் சமையல் அறையிலே தங்களது காலத்தை கழித்த காலத்தை மாற்றி, அரசு மற்றும் வெளித்தொடர்புகளை வலுப்படுத்தி, பெண்களாலும் அனைத்தையும் செய்ய முடியும் என்பதை நிரூபித்து வருகிறார்கள். மேலும் குழுக்களின் மூலம் சேமிப்பு பழக்கம், செலவுகளை எளிதாக சந்தித்தல், பெண்களுக்குள் ஒற்றுமை நிலைநிறுத்துதல், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை ஏற்படுதல், பணம் வீணாகாது பாதுகாக்கபடுதல் போன்ற நன்மைகள் நிறைந்த நாணயம் குழுக்களை திறம்பட செயல்படுத்தி வருகின்றனர். முன்பு பெண்கள் ஆண்களின் அதிகாரத்தினால் அடிமைப்படுத்தப்படும், குடும்பத்தில் எந்த வகையிலும் முடிவு எடுக்க முடியால் மற்றவர்களையே சார்ந்திருக்கும் சூழல் இருந்தது. குடும்பத்தில் அவசரத் தேவைகளை சந்திக்க முடியாமல் இருந்த போது, இந்த கட்டுகளிலிருந்து விடுவிக்கும் வகையில் கூண்டுக்குள் அடைக்கப்பட்டிருக்கும் கிளியைப் போல் பெண்கள் இருந்த நிலை மாறி கூண்டிலிருந்து வெளியில் சுதந்திரமாக பறக்க, நாணய சுய உதவிக் குழுக்கள் தீவிர முனைப்பாய் செயல்படுகின்றன.

நாணயக்குழுக்கள் மூலம் பயனடைந்து வரும் பெண்களுக்கு அடுத்த வாய்ப்பாக வந்தது பெண்கள் பாதுகாப்பு அட்டை திட்டம். பெண்கள் பாதுகாப்பு அட்டை மூலம், பெண்களுக்கு சந்தை தொடர்பு, திட்டமிட்டு செலவு செய்யும் திறன், செலவு செய்யும் உரிமை, அவசரத் தேவைகளை பூர்த்தி செய்தல் போன்ற நன்மைகளால் நிறைவு பெற்று வருகின்றனர். தங்கள் குடும்பத்திற்கு செலவிற்கேற்றார்போல் மதிப்புள்ள அட்டைகளை பெற்று பொருட்கள் கொள்முதல் செய்வதற்கு கூட்டமைப்பு திருச்சுழியில் இயங்கி வரும் நாணய பல்பொருள் அங்காடியில் பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்க பெற்று இன்புறுகின்றனர்.

நமது கடை என்ற உரிமையோடு சத்துள்ள ஆகாரம் கையில் காசு இல்லாமலும், பணம் திரும்ப செலுத்துவதற்கு ஏற்ற மதிப்பிற்குப் பொருட்கள் பெற்று தங்களது வாங்கும் திறனை அதிகரித்து வருகின்றனர்.

பண சேமிப்புக்காக மட்டுமே சுய உதவிக்குழுக்கள் என்ற எண்ணத்தை தகர்த்து சுயநலம் கடந்து, பொது நலம் காத்து பெண்ணுரிமை மலர நாணயக்குழுக்கள் பெரிதும் உதவுகின்றன.

தொகுப்பு
கிறிஸ்டி ஷீலா

## தம்பட்டம் :

1. எக்கா! ஒன்னு தெரியுமா ஒனக்கு! நம்ம ஸ்பிச் ஆபிஸ்ல, கைம்பெண்கள் பிள்ளைகளுக்கு ஒரு வருஷ இலவச தையல் பயிற்சி சொல்லி தராங்களாம்! நம்ம ஸ்பிச் பெரிய சார், பொற்கொடி அக்கா , திருச்சுழி யூனியன் சேர்மன் எல்லான்தா இத தெறந்து வச்சிருக்காங்க! எம்பிராய்டரி, பொம்மை செய்யறது, கூடை பின்னுறது எல்லா சொல்லி தரங்களாம்! தையல கத்து முடிச்சவுடன கவர்மென்ட் சர்டிபிகட்டு வாங்கி தர ஏற்பாடு பண்ணுறாங்களாம்! அதுமட்டுமல்ல இந்த பிள்ளைகளுக்கு தையல் முடிச்சவுடன ரெடிமேட் துணி தைப்பதற்கு ஏற்பாடு பண்ண போறாங்களாம்! மில்லுக்கு போய் நம்ம பிள்ளைக கண்டபடி கஷ்டபடறதற்கு கைத்தொழில கத்துக்கிட்டா கவலபடாம இருக்கலாம்! ஊர் பொறணியோட சேத்து இதயும் சொல்லு, நம்ம ஊரு பிள்ளைகளாச்சும் நல்லா இருக்கட்டும்.

2. கருப்பாயி ; அக்கா! இது தெரியுமா?
ராமாயி : சொன்னாதானடி தெரியும்.
கருப்பாயி : இப்ப பெண்கள் பிரச்சனைகள தீர்ப்பதற்கும் பெண்கள் கூட்டமைப்பு வச்சிருக்க மாதிரி, ,கைம்பெண் பிரச்சனய தீர்ப்பதற்கும், அவங்களுக்கு ஆலோசனை சொல்றதக்கும், மற்றும் வருமானத்த பெருக்குறதுக்கும், நம்ம ஸ்பிச் ஆபிஸ்ல ஒரு கூட்டமைபபு ஏற்படுத்த போறாங்களாம்!
ராமாயி : அப்படியா!
கருப்பாயி : ஆமாக்கா! அந்த கூட்டமைப்பு பேரு என்ன தெரியுமா?
ராமாயி : தெரியாது அதயும் நீயே! சொல்லு.
கருப்பாயி : நிம்மதியாம்!
ராமாயி : என்னக்கா பேர கேட்டா நிம்மதிங்கிற! முதல்ல பேர சொல்லுக்கா!
கருப்பாயி : அடகூறு கெட்டவள,பேரே நிம்மதி தான்.
ராமாயி : பேர கேட்கதற்கே நல்லா இருக்கு. எப்படியோ! அந்தப் பெண்கள் நிம்மதியா இருக்கணும் அது தான் நம்ம விருப்பம்.
கருப்பாயி : ஏதோ! முதல்ல இந்த கூட்டத்துக்கு போறப்ப என்ன இந்த கைம்பெண்கள கூப்பிட்டு, கூப்பிட்டு கூட்டம் நடத்துறாங்கன்னு யோசிச்சேன். ஆனா! இப்ப தான் தெரியுது, இதுல இவ்வளவு நல்ல விஷயம் இருக்குதுன்னு. பரவால நல்லதே நடக்கட்டும்.
ராமாயி : ஆமாக்கா! கட்டாயாமா நல்லது தான்

3. ராமாயி : அக்கா! நீ சொன்னைதையெல்லாம் நான் கேட்டல்ல, இப்ப நான் ஒரு நல்ல செய்தி சொல்ற கேளு.

கருப்பாயி : அப்படி! என்னடி முக்கியமான செய்தி!

ராமாயி : மழை பெய்ததுல இருந்து நம்ம விவசாய ஆபிஸ்ரங்க அங்கேயும், இங்கேயும் வண்டியில போயிட்டு வராங்க, அது ஏன்னு தெரியுமா?

கருப்பாயி : சொன்னாதானடி தெரியும்

ராமாயி : பல நல்ல, நல்ல திட்டங்க எல்லாம் மக்களுக்காக வச்சிருக்காங்களா!

கருப்பாயி : அப்படியா!.. அப்படி என்னென்ன திட்டங்க இருக்கு

ராமாயி : ஒவ்வொன்னா சொல்ற கேளு. 1. செம்மை நெல் சாகுபடி முறையின்னு ஒன்ன அறிமகப்படுத்தியிருக்காங்க! அதன் மூலமா அதிக மகசூல் பெற முடியுமாம். இந்த முறைய பயன்படுத்துனா, ஆட்கள் குறைவா, தண்ணீர் தேவை குறைவா, களைகள் குறைய வாய்ப்பு இருக்கா, இயந்திரம் மூலமா களை எடுக்கலாம், வேர்களே நோய் தாக்காதா, இப்படி பல நல்ல விஷயங்கள் இந்த முறையில இருக்கா. 2. பவர்ஸ்பிரே, கைஸ்பிரே போன்றவற்ற எல்லா பாதி விலைக்கு கொடுக்கறாங்களா! உதாரணமா, 5500/. ரூபா மதிப்புள்ளத 2750/. ரூபாக்கு கொடுக்கறாங்களாம். 3. 25 ஏக்கருல, ஒரே கிராமத்துல கடலை பயிரிட்டா, பயிரிடும் அந்த ஒரு நபருக்கோ அல்லது அந்த குழுவிற்கோ கடலை விதைகள் எல்லா இலவசமா கொடுக்கறாங்களாம். 4. இலை தழைகள் ஆகியவற்றை மட்டுமே கொண்டு தயாரிக்கப்பட்ட இயற்கை உரங்கள எல்லா மானிய விலையில கொடுக்கறாங்களாம், அது எப்படி தயாரிக்கறது என்பத பற்றி விளக்க எல்லா கொடுக்கறாங்களாம். 5. பழக்கன்று எல்லா பாதி விலைக்கு கொடுக்கறாங்களாம்! தற்பொழுது மா, சப்போட்டா, நெல்லி, கொய்யா போன்ற கன்றுகள கொடுத்துகிட்டு இருக்காங்களாம்! உதாரணாம, 30 ரூபா மதிப்புள்ள சப்போட்டா கன்ற 15 ரூபாக்கு கொடுக்கறாங்களாம்.

கருப்பாயி : எவ்வளோ நல்ல திட்டங்களா இருக்கு. நம்ம தான் இத எல்லா பயன்படுத்தாம இருந்திருக்கோம்.

ராமாயி : நம்ம 'ஸ்பிச்சும், வேளாண்மை துறயும்' இணைஞ்சு இது சம்பந்தப்பட்ட பயிற்சிகள மக்களுக்கு கொடுத்து வராங்களா! உதாரணமா கொட்டம், பண்ணைமூன்றடைப்பு போன்ற கிராமத்துல நடத்திட்டாங்களாம்.

கருப்பாயி : உண்மையாவா சொல்ற! அக்கா இது நம்ம கிராமத்துல நடக்க என்ன பன்னுறது.

ராமாயி : உடனே ஸ்பிச் ஆபிசுக்கு போ! அவங்க ஏற்பாடு பண்ணுவாங்க.

தம்பட்டம் அடிப்பவர்

பாவக்காய் பேசுகிறது :

என்னுடைய பெயர் பாவக்காய். என்னுடைய பெயரைச் சொன்னவுடனே அனைவரின் முகமும் கோணுகிறது. நான் கேரட், பீட்ரூட், தக்காளி, கத்தரிக்காய் போன்ற காய்கறிகளைப் போல அழகாக இருப்பதில்லை. நான் பச்சை நிறமாக இருந்தாலும் இதனால் சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரும் என்னை வெறுத்து ஒதுக்குகின்றனர். சமுதாயத்தில் ஜாதி, மதம், கல்வி, பொருளாதாரம் போன்றவற்றில் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதைப் போல காய்கறிகளிலும் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. காய்கறிகளிலே நான் தாழ்த்தப்பட்ட, ஒதுக்கப்பட்ட காய்கறி இனத்தைச் சார்ந்தவன். சிறு துரும்பும் பல்குத்த உதவும் என்ற பழமொழிக்கேற்ப என்னாலும் மக்களாகிய உங்களுக்கு பயனுண்டு மற்றும் பலனுண்டு என்பதை நினைவுபடுத்துவதற்காகவே நான் உங்களிடத்தில் வந்துள்ளேன். பூமியானது தன்னைத் தோண்டுபவர்களையும் தாங்கிக் கொண்டு அவர்கள் வாழ நன்மைகள் செய்கிறதோ அதைப்போல என்னைக் கொன்று,மென்று, தின்று உண்பவர்களுக்கும் நான் நன்மை புரிவேன். நான் மருத்துவக் குணங்கள் கொண்டவன். என்னுடைய மருத்துவக் குணங்களைச் சொல்கின்றேன். சற்றே கவனமாகக் கேளுங்கள்.

- தலைவலி ஏற்படும் போது, என்னை பச்சையாகச் சாப்பிட்டால்நான்தலைவலியினைக் குணப்படுத்துவேன்.
- உங்களுடைய குடலில் புண் ஏற்படும் போது, என்னைச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கி சிறிதளவு பொரிகடலையினைச் சேர்த்து சாப்பிட்டு வந்தால் நான் குடல் புண்ணினை ஆற்றி விடுவேன்.
- என்னுடன் சிறிதளவு தண்ணீர் ஊற்றி இடித்து இதன் மூலம் கிடைக்கப் பெறும் சாறினைக் குடித்து வந்தால் குடல்புண் குணமாகும்.
- என்னைச் சட்டியில் இட்டு, சிறிதளவு தண்ணீர் ஊற்றி நன்றாகக் கொதிக்க வைத்து அந்த சாறினைக் குடித்து வந்தால் சர்க்கரை நோய் சரியாகும்.
- என்னுடைய பூவினை நன்றாக உலர வைத்து தேங்காய் எண்ணையில் போட்டு ஊற வைத்துத் தலையில் தேய்த்தால் கண்ணுக்கு குளிர்ச்சி ஏற்படும். மேலும் தலையிலுள்ள பேன்,ஈறு, போன்றவை மறையும். அதேபோல் பூவினை நல்லெண்ணையில் போட்டு வதக்கி பச்சரிசியுடன் சேர்த்து ஊற வைத்து, சிறிதளவு தேங்காய்ப் பூவினைச் சேர்த்துச் சாப்பிட்டால், மாதவிலக்கு தள்ளிப் போகுதல் சரியாகும்.
- என்னுடைய பழத்தோளினை எடுத்துப் பாலில் போட்டு நன்கு ஊற வைத்து சாப்பிட்டால் வயதுக்கு வந்த பெண்களுக்கு ஏற்படுகின்ற அடி வயிற்று வலி குணமாகும்.

நான் ஒரு மருத்துவர் எனவே *என்னைப் பயன்படுத்துங்கள்! வாழ்வில் பயன்பெறுங்கள்!*